# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | EA.101/2018 in EP.145/2018 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | வா.சா– 05 ( PW– 05 ) |
| பெயர் | :- | ராஜேந்திரன் |
| தேதி | :- | 11–11–2025 |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை :–**

எனக்கு சொந்த ஊர் மேட்டூர் வட்டம், ஆயதாசனூர் கரட்டுக்காடு. எனக்கு 03 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. எனக்கு விவசாயம்தான் தொழில் என்றால் சரிதான். நான் முருகேசனிடம் வாடகைக்கு குடியிருந் -தேன். முருகேசன் எனக்கு வாடகை பத்திரம் எழுதிக் கொடுத்தாரா என்றால் எழுதிக் கொடுத்தார். நான் சேலத்தில் சிறுது காலம் கனரக வாகன பட்டறை -யில் வேலை செய்தேன். பட்டறை பெயர் எனக்கு தற்போது தெரியாது. சேலத்தில் 03 ஆண்டுகள் இருந்தேன். முன்பணத்திற்கு இரசீது எதுவும் கொடுக்கவில்லை. வாடகை பத்திரத்தில் எழுதிக் கொடுத்தார்கள். முன்பணத்தை அவர் திருப்பி கொடுத்ததும் வாடகை பணத்தை நான் திருப்பிக் கொடுத்துவிட்டேன்.

அங்கு வாடகைக்கு இருந்த மற்றவர்களின் பெயர் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். நான் மின் கட்டணம் தனியாக செலுத்தவில்லை. மொத்தமாக வாடகையுடன் கொடுத்துவிடுவேன். அந்த சொத்து முருகேசனுக்கு சொந்தமானது. முருகேசனின் அம்மா அவருக்கு

கொடுத்தார். நான் முருகேசனிடம் வாடகைக்கு இருந்ததாக பொய் சொல்கிறேன் என்றும் நான் அவருக்கு நெருங்கிய நண்பர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் முருகேசனின் வீட்டில் இருந்து காலி செய்து சென்றபிறகு அவரை நான் பார்க்கவில்லை. சாட்சி சொல்ல செந்தில் என்னை அழைத்தார்.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.